සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## கிறிஸ்தவ சமயம் - ක්‍රිස්තු ධර්මය

தரம் : **8** நேரம்: 2 மணித்தியாலம்

| பெயர் /சுட்டெண்: |
|---|

**பகுதி** I

- ♦ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக**
- ♦ **மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

1. திபேரியாக் கடல் என்பதற்கு இன்னொரு பெயராவது
   1) கருங்கடல் 2) செங்கடல்
   3) கலிலேயாக் கடல் 4) மத்தியத் தரைக் கடல்

2. 'ஓ இயேசு உமதன்பு - எத்தனை பெரியது' இப்பாடலை இயற்றியவர் யார்?
   1) எலிஸா எக்ணிது 2) ஜொய்ஸ் த சில்வா
   3) மைக்கல் ரொத்ரிகோ திருத்தந்தை 4) மார்சலீன் ஜயகொடி திருத்தந்தை

3. இயேசு கிறிஸ்து ஆபிரகாமின் குமாரன் எனக் கூறியது
   1) பேதுரு 2) சகேயு 3) மத்தேயு 4) யோவான்

4. லங்கா சபையின் குருநாகல் மாவட்டத்தில் மூன்றாவது மறைமாவட்ட அருட்தந்தையாக கூறப்படுபவர்
   1) சோமசிரி குமாரகே பெரேரா அருட்தந்தை
   2) வண கலாநிதி டொனல்ட் கனகரத்னம் தந்தை
   3) அதி வண லக்தாஸ் த மெல் தந்தை
   4) அதி வண என்ரூ குமாரகே தந்தை

5. பிள்ளையொன்று தேவனைப் பற்றி முதலாம் அனுபவத்தை பெறுவது
   1) வீட்டில் 2) முன் பள்ளியில் 3) தேவாலயத்தில் 4) பாடசாலையில்

6. இஸ்ராயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு போகும் போது வழிநடத்தியது
   (A) அக்கினிஸ்தம்பம் (B) மேகஸ்தம்பம் (C) நட்சத்திரம் (D) மணல்
   மேலே கூறப்பட்டுள்ள விடைகளில் மிகச் சரியான விடையாவது
   1) A யும் B யும் 2) B யும் C யும் 3) A யும் C யும் 4) C யும் D யும்

7. ஆவியின் கனி மட்டும் அடங்கும் தொகுதியாவது
   1) சமாதானமும் ஜெபமும் 2) மகிழ்ச்சியும் இறைவாக்குரைத்தலும்
   3) அன்பும் சந்தோவும் 4) சமாதானமும் ஜெபமும்

8. தேவன் மனிதனின் சரீரத்தை படைப்பதற்கு பயன்படுத்தியது
   1) வார்த்தை 2) களி 3) இரும்பு 4) தூசி

9. மனிதன் இறை படைப்பில்
   1) பொறுப்புதாரி 2) உரிமையாளன் 3) படைப்பாளி 4) சுதந்திரவாளி

10. இறைவன் பெற்றுக் கொடுத்த மீட்பை மனிதன் பயன்படுத்துவது

(A) நல்லதை தெரிவு செய்துகொள்ள (B) தீமையை தெரிவு செய்துகொள்ள

(C) இறைவனுக்கு கீழ் படிவதற்கு (D) இறைவனைப் போல் மாற்றமடைய

மேற்கூறிய தொகுதிகளில் மிகவும் சரியான விடையாவது

1) A யும் B யும் 2) B யும் C யும் 3) C யும் D யும் 4) B யும் D யும்

11. இயேசுவானவர் சிறு பராயத்தில் வளர்ந்தது

1) கலிலேயாவில் 2) சமாரியாவில்

3) நாசரேத்து பட்டணத்தில் 4) எருசலேம் பட்டணத்தில்

12. ஆயத்துறையில் இருக்கையில் இயேசுவுக்கு அறிமுகமான சீடன்

1) யாக்கோபு 2) அந்திரேயா 3) மத்தேயு 4) யோவான்

13. இயேசு தமது சீடர்களை தெரிவு செய்தது

1) தகுதியை கருத்தில் கொண்டு 2) அறிவைக் கருத்தில் கொண்டு

3) தொழிலைக் கருத்தில் கொண்டு 4) எதுவுமே கருத்தில் கொள்ளவில்லை

14. முதலாவது திருப்பணிக்கு அழைப்பு விடுத்தது

1) சமாரியர்களுக்கு

2) அந்திய இனத்தவர்களுக்கு

3) சமாரியருக்கும் , அந்தியர்களுக்கும்

4) இஸ்ரவேல் வம்சத்திற்கும் காணாமற் போன ஆடுகளுக்கும்

15.தனது வேலைகளை ஒரு புறமாய் வைத்து இயேசுவின் பாதத்தில் இருந்து இறைவார்த்தையைக் கேட்பதற்கு ஆசைக் கொண்ட பெண்

1) மார்த்தாள் 2) மரியாள் 3) யோவன்னா 4) சூசன்னா

16. கிறிஸ்துவோடுள்ள உறவை வளர்த்துக் கொள்ள செய்ய வேண்டியது

1) மற்றவர்களுடன் கலந்துரையாடுதல்

2) வணக்கஸ்தலங்களுக்கு செல்லுதல்

3) இறைவார்த்தையை வாசித்தல்

4) திருச்சபையில் சிரமதானங்களில் கலந்து கொள்ளல்

17. வாழ்வின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இறை நம்பிக்கையில் உறுதியாய் இருப்பதற்கு உணர்த்தும் தூய ஆவியின் கனியாவது

1) இச்சையடக்கம் 2) பொறுமை 3) நம்பிக்கை 4) அன்பு

18. ஆதி பிதாக்கள் பாவத்தில் விழுந்ததனால், இழந்தது

1) இறையரசை 2) நித்திய வாழ்வை 3) மரணத்தை 4) இறைபிள்ளையை

19. இயேசு கிறிஸ்து இவ் உலகில் செய்த பணியில் தினமும் எளியவர்களுக்கு

1) உதவி செய்தார் 2) துக்கத்தை உண்டுபண்ணினார்

3) உயர்வாக எண்ணினார் 4) நிராகரித்தார்

20. கிறிஸ்தவ பிள்ளையாகிய உமக்கு இந்நாள்வரை அனைத்து ஆசீர்வாதங்களும் கிடைத்தது

1) தகுதியினால் 2) எமது புத்தியினால்

3) பெற்றோரின் உதவியினால் 4) இறைவனின் மூலம்

(2✕20=40 புள்ளிகள்)

## பகுதி II

♦ **முதலாம் வினா கட்டாயமானதாகும். முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

1. சுருக்கமாக விடை எழுதுக.
   1. ஆவியின் கனிகள் இரண்டு எழுதுக?
   2. யோவான் நற்செய்திக்கு அமைய தேவன் மனிதனை எவ்வளவாக நேசித்தார்?
   3 நித்திய வாழ்வை இழந்ததினால் மனிதன் முகம் கொடுத்த பிரச்சினைகள் இரண்டு எழுதுக.
   4. 'இன்று இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்துள்ளது'. இக் கூற்று யாரால்? யாருக்கு? கூறப்பட்டது
   5. இயேசு கிறிஸ்து பாவியை அல்ல பாவத்தை மறுதலித்த சந்தர்ப்பங்கள் இரண்டு எழுதுக
   6. சீடர்கள் பன்னிருவரையும் இறை பணிக்காக அனுப்பபும் போது வழங்கிய அறிவுரைகள் இரண்டு எழுதுக.
   7. இயேசு கிறிஸ்து பிள்ளைகளை குணப்படுத்திய ஆறுதல் வழங்கிய சந்தர்ப்பங்கள் இரண்டு எழுதுக
   8. இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் இறை அழைப்பிற்கு உடனடியாக பதில் கொடுத்த சீடன் யார்?

   (2×8=16 புள்ளிகள்)

2. 1. நல்லாயனின் குணாதிசயங்கள் இரண்டு எழுதுக (2 புள்ளிகள்)
   2. இயேசு கிறிஸ்து நல்லாயனாக குறிப்பிடுவதற்கு ஏதுவான காரணங்கள் மூன்றை எழுதுக (3 புள்ளிகள்)
   3. நீர் இயேசுவை பின்பற்றுபவராக இருப்பதால் உமது மேய்ப்பத்துவ பணி என்ன என்பதை 6 காரியங்களைக் கொண்டு விபரிக்க (6 புள்ளிகள்)

3. 1. மக்கள் என்னை யார் என்று சொல்கிறார்கள்? என்று இயேசு கேட்ட கேள்விக்கு பேதுரு கூறிய பதில் என்ன? (2 புள்ளிகள்)
   2. இயேசு கிறிஸ்துவுக்கும் பேதுருவுக்குமிடையில் கலந்துரையாடல் நடைபெற்ற சந்தர்ப்பங்கள் மூன்று எழுதுக. (3 புள்ளிகள்)
   3. வகுப்புத் தலைவனாக உமக்கு பேதுருவின் வாழ்விலிருந்து எடுக்க கூடிய முன்மாதிரிகள் யாவை? (6 புள்ளிகள்)

4. 1. இவ்லின் கானியினால் அநாதை பிள்ளைகளுக்கும் , முதியோருக்கும் அமைத்து கொடுத்த வீடுகள் இரண்டு எழுதுக (2 புள்ளிகள்)
   2. வண என்ரூ குமாரநே தந்தை அவர்களின் திருப்பணியைக் குறித்து 3 குறிப்புகள் எழுதுக (3 புள்ளிகள்)
   3. எமக்கு கிடைத்துள்ள வரங்களை பயன்படுத்தி திருச்சபைக்காக செய்ய வேண்டிய பணிகள் 6 எழுதுக (6 புள்ளிகள்)

5. 1. வளர்ந்துவரும் இஸ்ரயேல் மக்களை கட்டுப்படுத்துவதற்கு பார்வோன் எடுத்த நடவடிக்கைகள் இரண்டு எழுதுக (2 புள்ளிகள்)
   2. பாரவோனிடமிருந்து விடுதலையாகி வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு பயணம் செய்யும் போது இறைவன் மக்களை சோதித்த சந்தர்ப்பங்கள் மூன்று எழுதுக (3 புள்ளிகள்)
   3. இன்றைய மனிதனை அடிமையாக்கி உள்ளவைகள் 3 எழுதுக அதிலிருந்து மீட்பு பெற நீர் எடுக்கும் தீர்மானங்கள் 3 எழுதுக. (6 புள்ளிகள்)

6. 1. இயேசு கிறிஸ்து தமது முதல் திருப்பணி போதனைக்காக பயன்படுத்திய இறைவாக்கு சுருளேடு எது? (2 புள்ளிகள்)
   2. மேற்கூறப்பட்ட இறைவாக்கு சுருளேட்டின் கிறிஸ்துவின் திருப்பணியை குறித்து கூறப்படும் விடயங்கள் 3 எழுதுக (3 புள்ளிகள்)
   3. உமக்கு வகுப்பறையில் கிறிஸ்துவின் பணிக்கு ஒத்துழைப்பு வழங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் ஆறு எழுதுக. (6 புள்ளிகள்)